ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**33 T I**

**අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2025(2026)**
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2025(2026)**
**General Certificate of Education (Ord. Level) Examination, 2025(2026)**

| | |
|---|---|
| ඉතිහාසය I<br>வரலாறு I<br>History I | පැය එකයි<br>ஒரு மணித்தியாலம்<br>*One hour* |

**அறிவுறுத்தல்கள் :**

- ❊ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ❊ **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
- ❊ **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**
- ❊ அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றையும் பின்பற்றுக.

**1.** இலங்கையின் வரலாற்றைக் கற்பதற்கு உதவும் மகாநாம தேரரினால் எழுதப்பட்ட இலக்கிய மூலாதாரம் எது?
(1) தீபவம்சம் (2) மகாவம்சம் (3) தாதுவம்சம் (4) தூபவம்சம்

**2.** செப்பனிடப்பட்ட கருங்கல் தூண்களில் எழுதப்பட்டுள்ள எழுத்தாவணம் எப்பெயரினால் அழைக்கப்படுகிறது?
(1) குகைக் கல்வெட்டு (2) சுவர்க் கல்வெட்டு (3) தூண் கல்வெட்டு (4) பாறைக் கல்வெட்டு

**3.** பின்வருவனவற்றுள் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் மரணித்தவரின் சடலத்தை அடக்கம் செய்தல் தொடர்பான சான்றுகள் கண்டெடுக்கப்பட்ட இடம் எது?
(1) கித்துள்கல பெலிலென (2) இரத்தினபுரி இரத்தினக்கல் சுரங்கம்
(3) ரஞ்சாமடம மயானம் (4) இரணைமடு படிவுக்குரிய சரளைக்கற்படிவு

**4.** புராதன காலத்தில் கிராமக் குளங்களைப் பராமரிக்கும் பணி ஒப்படைக்கப்பட்டிருந்தது
(1) கிருகபதியிடம் (2) கமிகவிடம் (3) பருமகவிடம் (4) மப்புறுமுகாவிடம்

**5.** புராதன இலங்கையில் காசு அச்சிடும் பிரிவின் தலைவரைக் குறிக்க கல்வெட்டுகளில் பயன்படுத்தப்பட்ட பெயர் என்ன?
(1) அச அதெக (2) ருப அதெக (3) நட அதெக (4) ஹதி அதெக

- பின்வரும் A, B, C, D ஆகிய கூற்றுகளைக் கொண்டு **6**, **7** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.
  A - யாழ்ப்பாணப் பிரதேச நிர்வாகத்துக்கு ரிஷிகிரி என்ற அமைச்சரை நியமித்தல்
  B - சோழரின் ஆதிக்கத்தை முறியடித்தல்
  C - பிராந்திய ஆட்சியாளர்களைத் தோல்வியடையச் செய்து அரச பதவியைப் பெறுதல்
  D - திரிபிடகம் நூலுருவம் பெறச்செய்தல்

**6.** பண்டுகாபய மன்னனுடன் தொடர்புடைய சரியான கூற்று எது?
(1) A (2) B (3) C (4) D

**7.** வசப மன்னனுடன் தொடர்புடைய சரியான கூற்று எது?
(1) A (2) B (3) C (4) D

**8.** பின்வருவனவற்றுள் 'திம்பிரிகே' எனப்படுவது யாது?
(1) பிரசவத்திற்காகக் கட்டப்பட்ட இடம்
(2) கிராமத்தின் பிரச்சினைகளைத் தீர்க்கும் இடம்
(3) சமய நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்ட இடம்
(4) கல்வி நடவடிக்கைகள் நடைபெற்ற இடம்

[பக். 2 ஐப் பார்க்க

9. பின்வரும் அளவை அலகுகளைக் கருதுக.

A - கவ்வ B - பேள

C - யொதுன D - அமுண

இவற்றுள் தூரத்தை அளப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட அளவை அலகுகளை மட்டும் குறிப்பிடும் விடை யாது?

(1) A உம் B உம் (2) A உம் C உம் (3) B உம் C உம் (4) B உம் D உம்

10. நிரல் I இல் புராதன சமூகத்தில் நிலவிய பல்வேறு தொழில்களும் நிரல் II இல் அத்தொழில்களுக்கு கல்வெட்டுகளில் அறிமுகப்படுத்தப்பட்ட பெயர்களும் தரப்பட்டுள்ளன. நிரல் I இற்கமைய நிரல் II ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள சரியான விடை யாது?

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1. ஆசிரியர்கள் | A - வெஹார |
| 2. வைத்தியர்கள் | B - சிதகர |
| 3. சட்ட நிபுணர்கள் | C - ஆசார்ய |
| | D - வெஜ |

(1) ABC (2) BCA (3) CAB (4) CDA

11. புராதன சமூகத்தில் மக்கள் சிற்றுண்டியாக உட்கொண்ட உணவு யாது?

(1) காடிப் புளிப்பு (2) தோடம்பழச்சாறு (3) தேன் (4) எள்ளு

12. புராதன இலங்கையில் அரசனுக்குச் சொந்தமான நிலங்களில் பயிர்செய்வதற்காக அரசினால் வசூலிக்கப்பட்ட வரி வகை எது?

(1) கெதி அட (2) தக்கபதி (3) போஜக்கபதி (4) மதெரமஜிபக

13. புராதன சமூகத்தில் விலங்குகளைக் கொலை செய்வோருக்குத் தண்டனை விதித்த, நான்காம் மகிந்த மன்னனால் நிறுவப்பட்ட கல்வெட்டு யாது?

(1) மிகிந்தலை சுவர்க் கல்வெட்டு (2) அனுராதபுர சுவர்க் கல்வெட்டு

(3) வேவல்கட்டிய கல்வெட்டு (4) வெஸ்ஸகிரி கல்வெட்டு

14. காலி மும்மொழிக் கல்வெட்டு எந்த இராசதானிக் காலத்தில் தாபிக்கப்பட்டது?

(1) யாழ்ப்பாணம் (2) கோட்டை (3) குருணாகல் (4) கம்பளை

- பின்வரும் A தொடக்கம் D வரையான கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு **15, 16** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

A - இபின்பதுதா என்ற பெயருடைய அராபிய பயணி இலங்கைக்கு வருகை தரல்

B - சபுமல் குமாரன் தலைமையில் இராணுவத்தை அனுப்பி யாழ்ப்பாணத்தை வெற்றி கொள்ளல்

C - பன்சிய பனஸ் ஜாதகக்கதை நூல் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்படுதல்

D - குத்தில காவியம், லோவடசங்கிராவ, கிராசந்தேசய, செலலிஹினி சந்தேசய என்பன எழுத்துருப் பெறல்

15. குருணாகலை இராசதானிக் காலத்துடன் தொடர்புடைய கூற்று

(1) A (2) B (3) C (4) D

16. கோட்டை இராசதானிக் காலம் பற்றிய தகவல்களைக் குறிப்பிடும் கூற்றுகள்

(1) A உம் B உம் (2) A உம் D உம் (3) B உம் C உம் (4) B உம் D உம்

17. இலங்கையில் அரசர்கள் சிலர் அரசுரிமை பெறுவதற்கு முன்னர் பயன்படுத்திய பெயர்கள் நிரல் I இலும் அரசுரிமையின் பின்னர் பயன்படுத்திய பெயர்கள் நிரல் II இலும் குறிப்பிடப்பட்டுள்ளன. நிரல் I இற்கமைய நிரல் II ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள சரியான விடை யாது?

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1. கண்ணுசாமி இளவரசன் | A - மாயாதுன்னை |
| 2. திகிரி இளவரசன் | B - முதலாம் இராஜசிங்கன் |
| 3. மகா அஸ்தான இளவரசன் | C - ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் |
| | D - இரண்டாம் இராஜசிங்கன் |

(1) ABC (2) ABD (3) CAD (4) CBD

[பக். 3 ஐப் பார்க்க

අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

**18.** பின்வரும் கூற்றுகளில் மறுமலர்ச்சிக்கால கலைத்துறையின் பண்பினை எடுத்துக்காட்டும் கூற்று யாது?
(1) கலைப் படைப்புகள் சமயம் சார்ந்திருந்தமை
(2) கலைப் படைப்புகள் அவற்றை ஆக்கியோனின் பெயரால் வெளிப்படுத்தப்பட்டமை
(3) தேவாலயங்கள் மட்டுமே கலைப் படைப்புகளுக்கு ஆதரவு வழங்கியமை
(4) சமய ரீதியாக முக்கியத்துவம் பெற்ற நபர்கள் மட்டும் சித்திரங்களுக்கு விடயப்பொருள்களாக அமைந்தமை

**19.** பின்வரும் விடயங்களில் யாழ்ப்பாண இராச்சியம் வீழ்ச்சியடைந்தமைக்குக் காரணமான விடயங்களைக் குறிப்பிடும் விடை யாது?
A - யாழ்ப்பாண இராச்சியத்தின் மரபுரிமையாளர்களிடையே ஏற்பட்ட ஆதிக்கப் போராட்டம்
B - யாழ்ப்பாணப் பிரதேசத்தில் கத்தோலிக்க சமயம் பரப்பப்பட்டமை
C - யாழ்ப்பாண ஆட்சியாளர்களிடம் போதியளவு நிரந்தர படையணி இல்லாதிருந்தமை
D - யாழ்ப்பாணத்தின் பெரும்பாலான மக்கள் போர்த்துக்கேயர் பக்கம் சார்ந்திருந்தமை
(1) A உம் B உம் (2) A உம் C உம் (3) B உம் C உம் (4) C உம் D உம்

**20.** கொன்ஸ்தாந்திநோபிள் நகரை துருக்கி முஸ்லிம்கள் கைப்பற்றிய பின்னர் ஆசியாவுக்கு வருவதற்கு புதிய கடல்வழிப் பாதையைக் கண்டறியும் நடவடிக்கைகளில் முதலில் ஈடுபட்ட ஐரோப்பிய நாடு
(1) பிரித்தானியா (2) ஒல்லாந்து (3) போர்த்துக்கல் (4) பிரான்ஸ்

**21.** தொழிற்புரட்சி காரணமாக சமூகத்தில் ஏற்பட்ட முக்கிய வேறுபாடு
(1) தாராளவாதம், சமூகவாதம் போன்ற தத்துவக் கருத்துக்கள் பரவலடைந்தமை
(2) பாரம்பரிய விவசாயப் பொருளாதாரக் கோலத்திற்குப் பதிலாக இறக்குமதி ஏற்றுமதி பொருளாதாரக் கோலம் தோற்றம் பெற்றமை
(3) பல்தேசிய சமூகங்கள் தோற்றம் பெற்றமை
(4) செல்வந்த வகுப்பினரும் பாட்டாளி வகுப்பினரும் தோற்றம் பெற்றமை

- A தொடக்கம் F வரையான தகவல்களைக் கொண்டு **22**, **23** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

| உற்பத்தி | கைத்தொழில் |
|---|---|
| A - பறக்கும் நூனாழி | D - நிலக்கரி |
| B - றோலர் இயந்திரம் | E - நெசவு |
| C - பாதுகாப்பு விளக்கு | F - இரும்பு உருக்கு |

**22.** ஜோன் கே என்பவரின் உற்பத்தி மற்றும் அதனுடன் தொடர்புடைய கைத்தொழில் பற்றிய தகவல்களைக் குறிப்பிடும் விடை எது?
(1) A உம் D உம் (2) A உம் E உம் (3) A உம் F உம் (4) B உம் E உம்

**23.** ஹம்றி டேவியின் உற்பத்தி மற்றும் அதனுடன் தொடர்புடைய கைத்தொழில் பற்றிய தகவல்களைக் குறிப்பிடும் விடை எது?
(1) B உம் D உம் (2) B உம் F உம் (3) C உம் D உம் (4) C உம் F உம்

**24.** பின்வரும் பிரித்தானியத் தூதுவர்கள் கண்டி இராச்சியத்துக்கு வருகை தந்த காலத்துக்கேற்ப ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள சரியான விடை எது?
A - ஹியூ பொயிட்
B - றொபட் அன்ட்ரூஸ்
C - ஜோன் பைபஸ்
(1) A C B (2) B C A (3) C A B (4) C B A

**25.** இந்தியாவுக்கு வருகைதந்த ஆங்கிலேயர் 18 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை இலங்கை பற்றி கவனஞ் செலுத்தாமைக்கான முக்கிய காரணம் யாது?
(1) இலங்கையின் முக்கியத்துவம் பற்றி அக்காலத்தில் ஆங்கிலேயர் தெளிவான விளக்கம் பெற்றிருக்காமை
(2) இந்தியாவுடன் ஒப்பிடும்போது இலங்கை ஒரு சிறிய தீவாகக் காணப்பட்டமை
(3) போர்த்துக்கேயருக்கும் ஒல்லாந்தருக்கும் இலங்கையை முழுமையாகக் கைப்பற்ற முடியாதிருந்தமையை அவர்கள் கண்டுகொண்டமை
(4) ஆங்கிலேயர் இந்தியாவில் பலமான ஆதிக்கத்தைக் கட்டியெழுப்பாதிருந்தமை

[பக். 4 ஐப் பார்க்க

26. 1848 சுதந்திரப் போராட்டத்துக்குக் காரணமான புதிய வரிச் சீர்திருத்தத்தை ஏற்படுத்திய ஆங்கிலேய ஆளுநர் யார்?
(1) பிரடெரிக் நோர்த் (2) டொரிங்ரன் பிரபு
(3) றொபெர்ட் பிறவுண்றிக் (4) தோமஸ் மெயிற்லண்ட்

27. யாழ்ப்பாணப் பிரதேசத்தில் சமயப் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த மிஷனரி இயக்கம்
(1) அமெரிக்கன் மிஷனரிச் சங்கம் (2) பெப்டிஸ்ட் மிஷனரிச் சங்கம்
(3) சேர்ச் மிஷனரிச் சங்கம் (4) இலண்டன் மிஷனரிச் சங்கம்

28. பின்வருவனவற்றுள் பௌத்த மறுமலர்ச்சிக் காலத்தில் வலிசிங்க ஹரிச்சந்திரவினால் மேற்கொள்ளப்பட்ட பணி யாது?
(1) அனுராதபுரத்திலுள்ள புனித இடங்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டமை
(2) பௌத்த கொடியை உருவாக்கியமை
(3) இந்தியாவிலுள்ள புனித தலங்களைப் பாதுகாக்க நடவடிக்கை மேற்கொண்டமை
(4) வெசாக் பௌர்ணமி தினத்தை விடுமுறை நாளாக்க நடவடிக்கை மேற்கொண்டமை

29. இலங்கையில் தேசிய மறுமலர்ச்சி இயக்கத்தின் செயற்பாடுகள் நிரல் **I** இலும் மறுமலர்ச்சிச் செயற்பாட்டாளர்களின் பெயர்கள் நிரல் **II** இலும் தரப்பட்டுள்ளன. நிரல் **I** இற்கேற்ப நிரல் **II** ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள சரியான விடை யாது?

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1. பெரியபுராணத்தை வசன நடையில் எழுதுதல் | A - பொன்னம்பலம் அருணாசலம் |
| 2. இலங்கை தேசிய சங்கத்தை உருவாக்குதல் | B - ஆறுமுக நாவலர் |
| 3. மத்ரஸா பாடசாலைகளைப் புனரமைப்புச் செய்தல் | C - பொன்னம்பலம் இராமநாதன் |
| | D - சித்திலெப்பை |

(1) A B D (2) A C D (3) B A D (4) B C D

30. பின்வருவனவற்றுள் கோல்புறூக் சீர்திருத்தம் மூலம் அறிமுகம் செய்யப்பட்ட பொருளாதாரச் சீர்திருத்த ஆலோசனை யாது?
(1) கண்டி இராச்சியத்தையும் கரையோரப் பிரதேசங்களையும் ஒன்றிணைத்தல்
(2) அரசின் வர்த்தக ஏகபோகத்தன்மையை இல்லாதொழித்தல்
(3) சட்டவாக்கக் கழகம், சட்ட நிருவாகக் கழகம் ஆகியவற்றைத் தாபித்தல்
(4) ஆங்கில மொழிக் கல்வியை நடைமுறைப்படுத்தல்

31. பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைப் பரம்பல் மற்றும் முன்னேற்றம் காரணமாக உருவான சமூகப் பிரச்சினை
(1) மதுபானப் பாவனை பரவலடைந்தமை
(2) இறக்குமதிப் பொருள்களின் பயன்பாடு பிரபல்யமடைந்தமை
(3) உள்நாட்டு விவசாயம் நலிவடைந்தமை
(4) பண்டமாற்று முறைக்குப் பதிலாகப் பணப் பரிமாற்றம் பிரபல்யமடைந்தமை

32. பின்வருவனவற்றுள் இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த பின்னர் தாபிக்கப்பட்ட அரசியல் கட்சி எது?
(1) ஐக்கிய தேசியக் கட்சி (2) இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி
(3) ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (4) இலங்கை சமசமாஜக் கட்சி

33. உலர் வலயத்தில் விவசாயக் குடியேற்ற இயக்கத்தை ஆரம்பித்தவர்
(1) எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா (2) என். எம். பெரேரா
(3) கொல்வின் ஆர். டி. சில்வா (4) டி. எஸ். சேனநாயக்கா

34. மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட முதலாவது நீர்த்தேக்கம் எது?
(1) விக்டோரியா நீர்த்தேக்கம் (2) ரந்தம்பே நீர்த்தேக்கம்
(3) ரந்தெனிகல நீர்த்தேக்கம் (4) போவத்தென்னை நீர்த்தேக்கம்

[பக். 5 ஐப் பார்க்க

අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



89596

- பின்வரும் A, B ஆகிய கூற்றுகளை அடிப்படையாகக் கொண்டு **35** ஆம் வினாவுக்கு விடை தருக.

A - அடிப்படை மனித உரிமையைப் பாதுகாத்தல்

B - பிரித்தானிய ஏகாதிபத்தியத்தோடு இருந்த யாப்பு ரீதியான இணைப்பை முடிவுறுத்தல்

**35.** கி. பி. 1972 அரசியல் யாப்புச் சீர்திருத்தம் தொடர்பில்

(1) A மட்டும் உண்மையானது. (2) B மட்டும் உண்மையானது.
(3) A உம் B உம் உண்மையானவை. (4) A உம் B உம் பொய்யானவை.

**36.** 1970 - 1977 காலப்பகுதியில் ஆட்சியில் இருந்த அரசு பின்பற்றிய இறக்குமதி பதிலீட்டுக் கைத்தொழில் கொள்கை தொடர்பில் **பொருத்தமற்ற** கூற்று யாது?

(1) இறக்குமதிப் பொருள்களுக்குப் பதிலாகப் பதிலீட்டு உள்நாட்டுப் பொருள்களை உற்பத்தி செய்தல்
(2) ஏற்றுமதி தொடர்பான கைத்தொழில்களை மேம்படுத்த வெளிநாட்டு பண முதலீட்டாளர்களை இந்நாட்டுக்குக் கொண்டு வருதல்
(3) அரச தலையீட்டுடன் நாட்டில் பாரியளவிலான கைத்தொழிற்சாலைகளை நடாத்துதல்
(4) உள்நாட்டு குடிசைக் கைத்தொழில்களையும் சிறு கைத்தொழில்களையும் முன்னேற்றுதல்

**37.** ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் நியமனம் செய்யப்படுவது

(1) பாதுகாப்புச் சபையின் சிபாரிசுக்கு அமைய பொதுச் சபையால் ஆகும்.
(2) சர்வதேச நீதிமன்றத்தால் ஆகும்.
(3) பொருளாதார சமூக சபையினால் ஆகும்.
(4) வீற்றோ அதிகாரத்தைக் கொண்ட நிரந்தர உறுப்புரிமை நாடுகளால் ஆகும்.

- பின்வரும் A, B, C, D என்பவற்றின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு சோடியிலும் முதலாவதுக்கும் இரண்டாவதுக்கும் இடையிலான தொடர்பைப் பரிசீலனை செய்து, **38** தொடக்கம் **40** வரையிலான வினாக்களுக்கு விடை தருக.

A – 1. ஜெர்மனியை ஒன்றிணைத்தல்
  2. முதலாம் உலக மகாயுத்தம்

B – 1. அச்சு வல்லரசுகள் (Axis Powers)
  2. பிரான்சு

C – 1. நாசிசவாதம்
  2. சனநாயகவாதம்

D – 1. இரண்டாம் உலக மகாயுத்தம்
  2. சர்வதேச சங்கம்

**38.** இரண்டாவது ஆரம்பமாவதற்கு முதலாவதும் காரணமானது என்பதைக் குறிப்பிடும் சோடியைக் கொண்ட எழுத்து எது?

(1) A (2) B (3) C (4) D

**39.** முதலாவதின் வளர்ச்சியுடன் இரண்டாவது அழிவுக்குள்ளானது என்பதைக் குறிப்பிடும் சோடியைக் கொண்ட எழுத்து எது?

(1) A (2) B (3) C (4) D

**40.** இரண்டாவதின் தோல்வி காரணமாக முதலாவது ஆரம்பமானது என்பதைக் குறிப்பிடும் சோடியைக் கொண்ட எழுத்து எது?

(1) A (2) B (3) C (4) D

* * *

OL/2025(2026)/33/T-II

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**33 T II**

89594

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2025(2026)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2025(2026)
General Certificate of Education (Ord. Level) Examination, 2025(2026)

ඉතිහාසය II
வரலாறு II
History II


1. (அ) (i) சுட்டெண் ..........................




[மறுபக்கம் பார்க்க

අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

1. (அ) (ii)



සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**33 T II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2025(2026)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2025(2026)
General Certificate of Education (Ord. Level) Examination, 2025(2026)

ඉතිහාසය II
வரலாறு II
History II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி **I** இல் வினா இலக்கம் **1** கட்டாயமானது.
※ பகுதி **II** இலிருந்து நான்கு வினாக்களுக்கும் பகுதி **III** இலிருந்து ஒரு வினாவுக்கும் விடை எழுதுக.
※ எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

**1.** (அ) (i) கீழே தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் **அனைத்தையும்** வழங்கப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப்படத்தில் குறித்துப் பெயரிடுக.

கொழும்பு, செங்கடகல, காலி, கல்பிட்டி நகரம், கல் ஓயா நீர்த்தேக்கம், யாழ்ப்பாண நகரம், தெதுறு ஓயா, நுவர வாவி, மன்னார் நகரம், திருகோணமலை நகரம், கும்புக்கன் ஓயா, பதவிய வாவி (12 புள்ளிகள்)

(ii) கீழே தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் **அனைத்தையும்** வழங்கப்பட்டுள்ள பகுதி உலகப் புறவுருவப் படத்தில் குறித்துப் பெயரிடுக.
பர்மா, கள்ளிக்கோட்டை, ஸ்பானியா, ஹிரோஷிமா, மலாக்கா நீரிணை, பால்டிக் கடல் (06 புள்ளிகள்)

(ஆ) (i) கீழே *A*, *B*, *C*, *D* எனத் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு உரிய விடைகளை ஒழுங்குமுறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.

*A* - திரிபிடகம் எந்த அரசனின் ஆட்சிக்காலத்தில் நூலுருவம் பெற்றது?
*B* - இலங்கையின் கரையோரப் பிரதேசங்களின் நிர்வாகத்துக்காக நியமிக்கப்பட்ட முதலாவது ஆங்கிலேய ஆளுநரின் பெயரைக் குறிப்பிடுக.
*C* - நீராவியின் சக்தியினால் இயங்கும் புகையிரத என்ஜினைக் கண்டுபிடித்தவர் யார்?
*D* - சிறிய நாடுகள் பலவற்றை ஒன்றிணைத்து ஜெர்மனி என்ற நாடு யாரால் உருவாக்கப்பட்டது? (04 புள்ளிகள்)

● *A*, *B* என்பவற்றினால் காட்டப்பட்டுள்ள படங்களை அவதானித்து, கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை வினா இலக்க ஒழுங்குமுறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.

(ii) 1. உரு *A* இல் காட்டப்பட்டுள்ளது யாது?
2. இது கண்டுபிடிக்கப்பட்ட இடத்தைக் குறிப்பிடுக.
3. இது எந்த வரலாற்றுக் காலப்பகுதிக்கு உரியது?
4. இதனைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் தொழினுட்ப உபகரணம் யாது?



*A*

(04 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



(iii) 1. உரு *B* இல் காட்டப்பட்டுள்ள அரசனின் பெயரைக் குறிப்பிடுக.
2. இந்த அரசன் ஆட்சி செய்த நாடு எது?
3. இந்த அரசனுக்கு உரிய அரசவம்சம் எது?
4. இவர் வசித்த அரசமாளிகை என்ன பெயரால் அழைக்கப்பட்டது?



*B*

(04 புள்ளிகள்)

## பகுதி II

**2.** (i) இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட மனிதன் வாழ்ந்த கரையோர வெட்டவெளிகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) வரலாற்றுக்கு முற்பட்ட மனிதனின் உணவுக் கோலத்தில் காணப்பட்ட **இரண்டு** பண்புகளை எழுதுக. (04 புள்ளிகள்)

(iii) முன் வரலாற்றுக் கால மனிதனின் வாழ்க்கையில் ஏற்பட்ட **இரண்டு** மாற்றங்களை விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) ஆரம்ப வரலாற்றுக் காலத்தின் கிராமக் குடியிருப்புகளில் காணப்பட்ட **மூன்று** பண்புகளை விளக்குக. (06 புள்ளிகள்)

**3.** (i) புராதன இலங்கையில் அரச உரிமை,
(*a*) தந்தையின் பின்னர் மகனுக்கு உரித்தான **இரண்டு** சந்தர்ப்பங்களையும்
(*b*) சகோதரனிடமிருந்து சகோதரனுக்கு உரித்தான சந்தர்ப்பம் **ஒன்றினையும்** **ஒழுங்குமுறைப்படி** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) கீழே A தொடக்கம் D வரையான ஒவ்வொரு தகவலுடனும் தொடர்புடைய மன்னர் யார் என்பதை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவுசெய்து **ஒழுங்குமுறையில்** குறிப்பிடுக.

A - முதன் முதலில் நாட்டில் கிராம எல்லைகளை வரையறுத்தமை

B - ருவான்வெலிசாய தாதுகோபத்திற்கு பூஜை செய்வதற்காக கண்ணாடி மணிகளை எடுத்து வருவதற்கு உரோம நாட்டுக்கு தூதரக அதிகாரிகளை அனுப்பியமை

C - முதன் முறையாக இலங்கை நிர்வாக அலகுகளாகப் (மாகாணங்களாக) பிரிக்கப்பட்டு நிர்வாகம் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டமை

D - சிறு வயதில் 'சித்தாருபிம புத்தனாயக்க' என்ற பாதுகாப்பு அதிகாரியின் பாதுகாப்பின் கீழ் வாழ்ந்துவந்தமை

(துட்டகைமுனு, வசபன், தேவநம்பியதீசன், பண்டுகாபயன், மகாசேனன், முதலாம் விஜயபாகு, முதலாம் பராக்கிரமபாகு, பாதிகாபய) (04 புள்ளிகள்)

(iii) தேவநம்பியதீசனின் ஆட்சிக்காலத்தில் நிகழ்ந்த **இரண்டு** வரலாற்று நிகழ்வுகளை விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) துட்டகைமுனு மன்னனால் செய்யப்பட்ட சேவைகளை **மூன்று** விடயங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக. (06 புள்ளிகள்)

**4.** (i) எலஹர கால்வாய் மூலம் நீர் வழங்கப்படும் **மூன்று** குளங்களைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) குளம் ஒன்றின் **நான்கு** முக்கிய பிரிவுகளை எழுதுக. (04 புள்ளிகள்)

(iii) (*a*) புராதன இலங்கையில் இரும்பைப் பிரித்தெடுக்கும் தொழினுட்பம் இருந்தமைக்கான தகவல்கள் கிடைத்துள்ள **இரண்டு** இடங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(*b*) அந்த இடங்களில் இரும்பு பிரித்தெடுக்கப்பட்ட முறையினைச் சுருக்கமாக விவரிக்குக. (03 புள்ளிகள்)

(iv) சீகிரியாவில் மிகச்சிறந்த நகரம் மற்றும் பூங்கா நிர்மாணத் தொழினுட்பம் காணப்பட்டமையை **மூன்று** விடயங்களைக் கொண்டு விளக்குக. (06 புள்ளிகள்)

[பக். 3 ஐப் பார்க்க

5. (i) உரிமை, அனுபவித்தல் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு கண்டி இராச்சியத்தின் நிலம் (காணி) வகைப்படுத்தப்பட்டிருந்த **மூன்று** பிரிவுகளை எழுதுக. (03 புள்ளிகள்)
(ii) முதலாம் விமலதர்மசூரிய மன்னன் அதிகாரத்துக்கு வந்ததும் எதிர்நோக்கிய **இரண்டு** சவால்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)
(iii) கண்டி இராச்சியத்தின் பிரதேச நிர்வாகம் நடைமுறைப்படுத்தப்பட்ட விதத்தினை **இரண்டு** விடயங்களைக் குறிப்பிட்டு விவரிக்குக. (05 புள்ளிகள்)
(iv) கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனின் ஆட்சிக் காலத்தின் முக்கியத்துவத்தை **மூன்று** விடயங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக. (06 புள்ளிகள்)

6. (i) போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருகைதந்தபோது இங்கு நிலவிய **மூன்று** இராசதானிகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)
(ii) போர்த்துக்கேயரினால் கண்டி இராச்சியத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்புகள் தோல்வியடைந்ததில் தாக்கம் செலுத்திய **இரண்டு** காரணங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)
(iii) போர்த்துக்கேயர் கோட்டை இராச்சியத்துடன் கொண்டிருந்த தொடர்பினை **இரண்டு** விடயங்களைக் கொண்டு விவரிக்குக. (05 புள்ளிகள்)
(iv) கண்டி இராச்சியம் தொடர்பில் ஒல்லாந்தர் பின்பற்றிய கொள்கைகளின் முக்கிய பண்புகள் **மூன்றினை** விளக்குக. (06 புள்ளிகள்)

7. (i) கோல்புறூக் சீர்திருத்தத்துக்கு ஏற்ப இலங்கை பிரிக்கப்பட்டிருந்த மாகாணங்களில் **மூன்றைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)
(ii) இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கையின் நடுத்தர வகுப்பினரால் அரசியல் சீர்திருத்தங்கள் தொடர்பாகச் செய்யப்பட்ட **இரண்டு** வேண்டுகோள்களை எழுதுக. (04 புள்ளிகள்)
(iii) டொனமூர் அரசியலமைப்பின் கீழ் தாபிக்கப்பட்ட நிருவாகக் குழு முறையை **இரண்டு** விடயங்களைக் கொண்டு விவரிக்குக. (05 புள்ளிகள்)
(iv) சோல்பரி அரசியல் சீர்திருத்தத்தின் கீழ் அறிமுகஞ் செய்யப்பட்ட பின்வரும் விடயங்கள் பற்றிச் சுருக்கமாக விளக்குக.
A - ஆளுநர் நாயகம்
B - இரு சபைகளைக் கொண்ட பாராளுமன்றம்
C - பிரதம மந்திரியின் தலைமையிலான அமைச்சரவை (06 புள்ளிகள்)

## பகுதி III

8. (i) பிரான்சியப் புரட்சியில் தாக்கம் செலுத்திய கோட்பாடுகளை முன்வைத்த **மூன்று** தத்துவவியலாளர்களின் பெயர்களைத் தருக. (03 புள்ளிகள்)
(ii) பின்வரும் ஒவ்வொரு விடயமும் ஆரம்பமாவதில் தாக்கம் செலுத்திய அண்மித்த காரணத்தை **ஒழுங்குமுறையில்** குறிப்பிடுக.
(*a*) அமெரிக்க சுதந்திரப் போர்
(*b*) பிரான்சியப் புரட்சி (04 புள்ளிகள்)
(iii) பிரான்சியப் புரட்சியின் **இரண்டு** விளைவுகளை விவரிக்குக. (05 புள்ளிகள்)
(iv) ரஷ்யப் புரட்சியின் பின்னர் அந்நாட்டில் ஏற்பட்ட **மூன்று** மாற்றங்களை விளக்குக. (06 புள்ளிகள்)

9. (i) முதலாம் உலக மகாயுத்தத்தில் தோல்வியடைந்த அணிக்குரிய **மூன்று** நாடுகளின் பெயர்களைத் தருக. (03 புள்ளிகள்)
(ii) ஐக்கிய அமெரிக்கா பின்வரும் உலக மகாயுத்தங்களுடன் தொடர்புபடுவதில் தாக்கம் செலுத்திய அண்மித்த காரணத்தை **ஒழுங்குமுறைப்படி** குறிப்பிடுக.
(*a*) முதலாம் உலக மகாயுத்தம்
(*b*) இரண்டாம் உலக மகாயுத்தம் (04 புள்ளிகள்)
(iii) இரண்டாம் உலக மகாயுத்தம் தொடர்பில் ஜப்பானின் செயற்பாடுகள் தாக்கம் செலுத்திய விதத்தினை **இரண்டு** விடயங்களைக் கொண்டு விவரிக்குக. (05 புள்ளிகள்)
(iv) இரண்டாம் உலக மகாயுத்தத்தின் **மூன்று** விளைவுகளை விளக்குக. (06 புள்ளிகள்)

***

අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න